1993 பிப்ரவரி 8]

20—

இராசிபுரம் தொகுதியில் க்ளுகோஸ் தொழிற்சாலை அமைத்தல்.

*9655—திருமதி க. பழனியம்மாள்: மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

இராசிபுரம் தொகுதியில் க்ளுகோஸ் பாக்டரி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. எஸ். நாகூர் மீரான்: ஊரகத் தொழில் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இராசிபுரம் தொகுதியில் குளுகோஸ் பேக்டரி அமைக்கும் திட்டம் ஏதும் பரிசீலனையில் இல்லை.

திருமதி க. பழனியம்மாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தை இந்தியாவிலேயே தொழில் துறையில் முதல் மாநிலமாகக் கொண்டு வருவதற்காக அரும்பாடு பட்டு அல்லும் பகலும் உழைத்து வருகிற நம்முடைய மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சியில் இராசிபுரம் தொகுதியில் ஒரு குளுகோஸ்ஃபேக்டரி அமைத்துத் தந்தால் அது நன்றாக இருக்கும். ஏனென்றால் ராசிபுரம் வட்டத்தில் மட்டும் சுமார் 200 சேகோ பேக்டரிஸ் இருக்கின்றன. மிகவும் அதிக அளவில் சேலம் வட்டத்திலும் ஆத்தூர் வட்டத்திலும் 200-க்கும் மேற்பட்ட சேகோ பேக்டரீஸ் இருக்கின்றன. எனவே குளுகோஸ் பேக்டரிக்குத் தேவையான மூலப் பொருளான, ஸ்டார்ச் என்ற பொருள் மிக 'சீப்'ஆன, குறைந்த விலையிலே கிடைக்கும் என்ற காரணத்தினாலேயும், ராசிபுரம் வட்டமானது தொழில் துறையிலே பின்தங்கி இருப்பதாலும், அங்கே ஒரு பேக்டரி அமைத்துத் தர புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சியில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மறுபரிசீலனை செய்து அதை ஏற்படுத்தித் தர முயற்சி எடுப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 11-05

மாண்புமிகு திரு. எஸ். நாகூர் மீரான்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய பொற்கால ஆட்சியில் தொழிற்சாலைகள் சிறப்புடன் செயல்பட்டு வருகின்றன என்ற அளவிலே தொழில்கள் அதிகமாக தொடங்கப்பட்டு வருகின்றன. அந்த அடிப்படை

யிலே தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய மேலான துறையின் மூலம் கடலூரில் சிப்காட் தொழிற்பேட்டை உட்ஸ்டாஸ் பயோ-டெக் பேக்டரி என்ற நிறுவனத்துடன் சிப்காட் இணைந்து குளுகோஸ் உற்பத்தியை விரைவில் தொடங்க இருக்கிறது. சேலம் மாவட்டத்தைப் பொறுத்தவரையில் மரவள்ளிக் கிழங்கு ஆண்டுக்கு ஒன்றுக்கு 7 லட்சம் டன்கள் உற்பத்தி ஆகிறது. அது ஜவுளித் தொழிலுக்கு அதிகமாக பயன் படுத்தப்படுவதால் அந்த ஜவ்வரிசி போன்ற முக்கியமான பொருள்கள் தயாரிக்கப்படுவதற்கு போதுமான அளவுக்கு கிழங்கு இல்லை. எனவே ராசிபுரம் தொகுதியில் குளுகோஸ் தயாரிக்கும் தொழிற்சாலை தொடங்குவதற்குப் பரிசீலிக்க இயல வில்லை.

15----

நெல்லிக்குப்பம் தொகுதி கிராமங்களில் தென்பெண்ணை பெருவெள்ளத்தால் விளைநிலங்கள் பாதிப்பு.

*9696— திரு. சி. தாமோதரன்:

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நெல்லிக்குப்பம் தொகுதி, பண்ருட்டி வட்டம், புலவனூர்—தட்டாம்பாளையம், மேல் குமாரமங்கலம், பகண்டை ஆகிய கிராமங்களில் கடந்த 17—11—1991 அன்று தென் பெண்ணை ஆற்றில் பெருகி வந்த பெரு வெள்ளத்தால் விவசாய விளைநிலங்கள் மணல் மேடிட்டு இருப்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அவற்றை நிவர்த்தி செய்ய அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன், வேளாண்மைத்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): கடலூர் மாவட்டம், பண்ருட்டி வட்டம் புலவனூர் பகுதியில் 17—11—1991 அன்றுப தென் பெண்ணை ஆற்றில் பெருகி வந்த பெரு வெள்ளத்தால் 40 ஹெக்டேர் நிலம் மணல் மேடிட்டு இருப்பதை தலைமைப் பொறியாளர் (வேளாண்மைப் பொறியியல்) அரசுக்குத் தெரி வித்துள்ளார்.

தலைமைப் பொறியாளர் (வேளாண்மைப் பொறியியல்), தென்பெண்ணை ஆற்றில் பெருகிவந்த வெள்ளத்தினால் மணல் மேடிட்ட நிலங்களை சமன் செய்ய ரூ. 150 இலட்சம் ஒப்பளிப்பு வழங்குமாறு அரசிற்கு செயற்குறிப்பை அனுப்பியுள்ளார். அவரது செயற்குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உடுக்குறியிட்ட வினாக்கள் முடிவுற்றன.